**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2023 ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 24–ஆம், நாள் திங்கட்கிழமை**

**CNR No.TNTI12-000096-2018**

**இடைநிலை மனு எண்.9/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.89/2018**

1.ஆர்.கே.ராமசாமி (இறப்பு)

2.ராஜம்மாள்

3.ஆர்.பாலசுந்தரி என்கிற ஆர்.சுந்தரி

4.கே.வசந்தி

5.பி.மணியரசி

6.ஆர்.கிருஷ்ணமூர்த்தி

7.கஸ்தூரி பாய் என்கிற கஸ்தூரி

8.ஆர்.தர்மராஜ்

9.ஆர்.செல்வராஜ்

... மனுதாரர்கள்/வாதிகள்

**.. எதிர் ..**

1.எஸ்.கோபால்

2.எஸ்.முருகேசன்

3.பி.கிருஷ்ணமூர்த்தி

4.என்.தெய்வசிகாமணி

5.வி.பாலசுப்பிரமணியம்

6.சார் பதிவாளர், அவிநாசி

7.சாரதா தேவி

8.கே.ஜெயலட்சுமி

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 09.06.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.இ.பி.இளவரசு அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சுந்தர்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 8 வரையிலான எதிர்மனுதாரர்களை அழைத்து ஆஜராகாததால் அவர்களை தோன்றா தரப்பினர்களாக உத்திரவிடப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

5ம் மனுதாரின் தகப்பனாரான ஆர்.கே.ராமசாமி ஏற்படுத்திய 31.05.2006 தேதியிட்ட நோடரைஸ்டு உயில் ஆணத்தை தாக்கல் செய்வதற்கான காலதாமதத்தை மண்ணித்தும், மேற்படி ஆவணத்தை வழக்கில் கூடுதல் ஆவணமாக குறியீடு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 14(2) உடன் இணைந்த பிரிவு 151–ன்படி, மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு:–**

2.1.) மனுதாரர் 5ம் வாதி என்றும், மற்ற மனுதாரர்கள் 5ம் வாதியின் தாயார்

மற்றும் சகோதர சகோதரிகள் என்றும், மனுதாரரின் தந்தை இந்த அசல் வழக்கினை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும் உறுத்துக்கட்டளை மற்றும் இதர பரிகாரங்களை கோரியும் தொடர்ந்துள்ளதாகவும், அசல் வழக்கானது கடந்த 04.01.2022 தேதியில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக இருந்த நிலையில் மனுதாரரின் காலம் சென்ற தந்தை ராமசாமி, இந்த அசல் வழக்கினை திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 2009 தேதியில் தொடர்ந்ததாகவும், அதற்கு பின்னிட்டு பண வரம்பு காரணமாக இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கு பெறப்பட்டு புதிய வழக்கு எண் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் தந்தை ஆர்.கே.ராமசாமி கடந்த 22.05.2014 தேதியில் இறந்துவிட்டதாகவும், அதற்கு பிறகு மனுதாரர்கள் தங்களை இந்த அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்ந்துள்ளதாகவும், மனுதாரர்கள் தரப்பில் 5 ம் மனுதாரர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.2.) மனுதாரர் தன்னுடைய தந்தை வைத்திருந்த பெட்டியில் இருந்த பழைய ஆவணங்களை சரிபார்த்த போது அதில் 31.05.2006 தேதியிட்ட மனுதாரரின் தந்தையின் நோட்டரி சான்றொப்பம் இட்ட உயில் ஆவணம் இருந்ததை கண்டறிந்ததாகவும், அதனை பரிசீலிக்கையில் மனுதாரரின் தந்தை தன்னுடைய சட்டப்படியான வாரிசுகளுக்கு மத்தியில் தாவா சொத்தை மேம்படுத்தியுள்ளதாகவும், அந்த உயில் ஆவணம் இந்த அசல் வழக்கிற்கு தொடர்புடையது மற்றும்

முக்கியமானது என்றும், அதனை இதற்கு முன்பாக கண்டறிய முடியவில்லை என்றும், அந்த உயில் ஆவணத்தை வேண்டுமென்றோ, ஆஜாக்கிரத்தையாகவோ காலதாமதமாக தாக்கல் செய்யவில்லை என்றும், தற்போது தான் அந்த ஆவணம் குறித்து தெரியவந்ததாகவும், அந்த ஆவணத்தை கூடுதல் ஆவணமாக பெறவேண்டியது அவசியம் என்றும், மனுவினை அனுமதிக்க வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

3) <u>3 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>

3.1.) 3 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை 1, 2, மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மனு சட்டப்படியும் சங்கதிகள் படியும் நிலைக்கதக்கது அல்ல என்றும், எதிர்மனுவில் குறிப்பிட்டுள்ள ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூப்பிக்கவேண்டும் என்றும், ஏற்கனவே மனுதாரர்கள் 15.07.1996 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை ஒப்பீடு செய்ய மனு தாக்கல் செய்திருந்ததாகவும், அது தடய நிபுனரால் ஒத்தவை என்று நிரூப்பிக்கப்பட்டுள்ளதாகவும், 1 ம் மனுதாரரால் ஆவணம் எழுதப்பட்டுள்ளதாக தெளிவாகியுள்ள நிலையில் 31.05.2006 தேதியிட்ட உயில் ஆவணத்தை உருவாக்க 1ம் மனுதாரருக்கு உரிமை இல்லை என்றும், அந்த உயில் ஆவணம் மோசடியானது என்றும், பின்னிட்டு இந்த அசல் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றும், எதிர்மனுதாரர்கள் மேற்படி உயில் ஆவணம் 1ம்

மனுதாரரால் எழுதப்பட்டுள்ளதாக கூறுவதை கடுமையாக ஆட்சேபனை செய்வதாகவும், அந்த உயில் ஆவணம் மோசடியானது என்றும் உயில் ஆவணத்தை பற்றி வழக்குரையில் வாதுரைக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

3.2.) வழக்குரையில் வாதுரைக்கப்பட்டிருந்தால் எதிர்மனுதாரர்களுக்கு அந்த ஆவணத்தை பற்றி மறுப்பு தெரிவிக்க ஒரு வாய்ப்பு இருக்கும் என்றும், வழக்குரையில் குறிப்பிட்டு வாதுரைக்கப்படாமலும் எதிர்மனுதாரர்களுக்கு அது குறித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்பு கொடுக்காமலும் உள்ள ஆவணத்தை சாட்சியமாக கொடுக்கமுடியாது என்றும் உயில் ஆவணம் தாவா தேதிக்கு முன்பு தேதியிடப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு உயில் ஆவணம் இருந்திருந்தால் 1ம் மனுதாரர் இந்த அசல் வழக்கினை 2009-ல் தொடரும் போதே வெளிப்படுத்தியிருப்பார் என்றும், வழக்குரையில் உயில் ஆவணத்தை குறிப்பிடாததிலிருந்தே அந்த ஆவணம் இல்லை என்பதை அறியமுடியும் என்றும் தற்போது மனுதாரர்கள் இந்த மனுவிற்காக பொய் கதைகளை புனைந்துள்ளதாகவும், 1ம் மனுதாரர் ஏற்கனவே தாவா சொத்தை முறையாக கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அதனை முடிவு செய்வதற்கு முன்பாக இந்த மனு ஏற்க தக்கது அல்ல என்றும், உயில் ஆவணம் குறித்து இந்த மனுவில் முதல் முதலாக குறிப்பிடப்பட்டிருப்பது ஏற்ககூடியது அல்ல என்றும், இம்மனுவினை செலவு

தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் ம.சா.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:–</u>**

5.1.) இம்மனுவின் தரப்பினர்களை அசல் வழக்கில் குறிப்பிட்டுள்ள வரிசைக்கு இணங்க மனுதாரர்களை வாதிகள் என்றும், எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2.) வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்வைத்துள்ள வாதமானது மனு உயில் ஆவணம் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும் அந்த ஆவணம் முக்கியமான ஆவணம் என்றும், அதனை காலதாமதமாக பெற அனுமதிக்க வேண்டும் என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்வைத்துள்ள வாதமானது வழக்குரையின் வாதுரையில் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள மோசடியான ஆவணத்தை சாட்சியமாக பெறமுடியாது என்றும், வாதுரைக்கப்படாத சங்கதிகள் குறித்து சாட்சியம்

கொடுக்கமுடியாது என்று மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

5.3.) இரு தரப்பு வாதங்களை கவனமாக கருத்தில் எடுத்துக்கொண்டுள்ள நேரத்தில் கட்டளை 7 விதி 14–ன் சட்ட வகைமுறையை குறிப்பிட்டு கூறுவது அவசியமாக உள்ளது.

Order 7 Rule 14 of CPC;

14. Documents relied on in Plaint.- Production of document on which plaintiff sues or relies

(1) Where a plaintiff sues upon a document or relies upon document in his possession or power in support of his claim, he shall enter such documents in a list, and shall produce it in court when the plaint is presented by him and shall, at the same time deliver the document and a copy thereof, to be filed with the plaint.
(2) Where any such documents not in the possession or power of the plaintiff, he shall, wherever possible, state in whose possession or power it is.
(3) A document which ought to be produced in Court by the plaintiff when the plaint is presented, or to be entered in the list to be added or annexed to the plaint but is not produced or entered accordingly, shall not without the leave of the Court, be received in evidence on his behalf at the hearing of the suit.
(4) Nothing in this rule shall apply to document produced for the cross examination of the plaintiff's witnesses, or, handed over to a witness merely to refresh his memory.

5.4.) மேற்கண்ட சட்டவகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்படாத ஆவணங்களை நீதிமன்ற அனுமதியுடன் வழக்கு விசாரணையில் சாட்சியமாக பெறலாம் என்பதை அறியமுடிகிறது. வழக்குரையை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கையில் வழக்குரையில்

மேற்கண்ட 31.05.2006 தேதியிட்ட உயில் ஆவணம் குறித்து எந்த இடத்திலும் வாதுரைக்கப்படவில்லை என்பதை அறியமுடிகிறது. 1ம் வாதி இந்த அசல் வழக்கினை கடந்த 03.06.2009 தேதியில் தாக்கல் செய்துள்ளார். 1ம் வாதி தாக்கல் செய்துள்ள இந்த அசல் வழக்கின் வழக்குரையில் 1ம் வாதியால் எழுதி வைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படும் மனு உயில் ஆவணத்தை 1ம் வாதி வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை. 31.05.2006 தேதியிட்ட நோட்டரி சான்றிட்ட உயில் ஆவணமானது இந்த அசல் வழக்கு தொடருவதற்கு முன்தைய ஆவணமாகும். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குடன் தொடர்புடைய ஆவணங்களை காலதாமத்துடன் நீதிமன்ற அனுமதியுடன் தாக்கல் செய்யலாம். ஆனால் வழக்குரையில் குறிப்பிடப்படாத வழக்குரையில் வாதுரைக்கப்படாத ஆவணத்தை ஒரு சாட்சியமாக தாக்கல் செய்யமுடியாது. வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள வாதுரைக்கு பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்கிறார்கள். வழக்குரையில் குறிப்பிடப்படாத வாதுரைக்கும் ஆவணங்களுக்கும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பிரதிவாதிகளுக்கு வாய்ப்பு இல்லை. மேற்கண்ட சூழ்நிலையில் வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிப்பது நீதியின் நலனுக்கும் இயற்கை நீதிக்கும் உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து

உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 24.07.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.07.24 17:10:42 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

<u>**பிற்சேர்க்கை :–**</u>
**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| மா.சா.ஆ.1 | 31.05.2006 | ஆர்.கே.ராமசாமி எழுதிக்கொடுத்த நோடரைஸ்டு உயில் சாசனம் அசல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–**
இல்லை

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.07.24 17:10:51 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.9/2023
இன்
அ.வ.எண்.89/2018
வரைவு/சீரான உத்தரவு
நாள்.24.07.2023
மா.உ.நீ., அவிநாசி